[திரு. ச. இராமச்சந்திரன்] [1979 ஏப்ரல் 20

(6) மேற்கூறிய சூழ்நிலையில் நம் மாநிலத்தில் சிமெண்ட் தட்டுப்பாடு ஏதும் இல்லை. ஆகையால் கட்டிடத் தொழிலாளர்கள் அதிக அளவில் வேலையிழந்திருக்கிறார்கள் என்ற கூற்றுக்கு இடமில்லை.

(4) அரசினர் சட்ட முன்வடிவுகள்.

அ. கூட்டுறவுச் சங்கங்கள் (இரண்டாவது திருத்த) சட்டமுன் வடிவு, 1979.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1979ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறைவேற்றப் பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

(5) அறிவிப்பு.

பொது விற்பனை வரி (திருத்த) சட்ட முன்வடிவு, 1979.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து பேரவைக்கு ஓர் அறிவிப்பு.

தமிழ்நாடு 1979ஆம் ஆண்டு பொது விற்பனை வரி (திருத்த) சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய ஆளுநர் அவர்கள் இசைவைத் தெரிவித்திருக்கிறார்கள்.

(4) அரசினர் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி.

ஆ பொது விற்பனை வரி (திருத்த) சட்ட முன்வடிவு 1979.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1979ஆம் ஆண்டு பொது விற்பனை வரி(திருத்த) சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகப்படுத்த அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : இச்சட்ட முன் வடிவை பேரவை முன் அறிமுகப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச் சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

(இ) மாநகரச் சிறுவழக்கு நீதிமன்றங்கள், சிவில் வழக்கு நடைமுறை சட்டக்கோவை, தமிழ்நாடு நீதிமன்றக் கட்டணங்கள்—தாவாக்கள் மதிப்பு (திருத்த) சட்டமுன்வடிவு, 1979.

மாண்புமிகு திரு. கே. நாராயணசாமி : தலைவர் அவர்களே, 1979ஆம் ஆண்டு மாநகரச் சிறுவழக்கு, நீதிமன்றங்கள், சிவில் வழக்கு நடைமுறை சட்டக்கோவை, தமிழ்நாடு நீதிமன்றக் கட்டணங்கள்—தாவாக்கள் மதிப்பு (திருத்த) சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகப்படுத்த அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப் பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு திரு. கே. நாராயணசாமி : தலைவர் அவர்களே, இச்சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

(6) வரவு-செலவுத் திட்டம், 1979–80—வாக்கெடுப்பு—தொடர்ச்சி

(அ) கோரிக்கை எண் : 35—நுகர்பொருள் வழங்கல்.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிந்துரையின்மேல், கீழ்க் கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :